සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
Department of Samurdhi Development
කාන්තා, ළමා කටයුතු හා සමාජ සවිබලගැන්වීම් අමාත්‍යාංශය
மகளிர் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு
Ministry of Women, Child Affairs and Social Empowerment

මගේ අංකය / எனது இல / My No: DSD/HO/08/PM/04/E.Power
ඔබේ අංකය / உமது இல / Your No: ..........................................
දිනය / திகதி / Date: 2024.06.24

சமுர்த்தி சுற்றறிக்கை இலக்கம் :- 2024/02 இற்கான முதலாவது பிற் சேர்க்கை.

சகல மாவட்ட செயலாளர்கள்/மாவட்ட சமுர்த்தி மேலதிக பணிப்பாளர் தலைமை அதிபதிகள்,
மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்கள்,
பிரதேச செயலாளர்கள்,
பிரதி/உதவிப் பணிப்பாளர்கள், சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்க முகாமையாளர்கள்,
சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள்,
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,
சமுதாய அடிப்படை அமைப்புத் தலைவர்கள்.

**"நலன்புரி தேசம் ஒன்றிலிருந்து தொழில் முயற்சியான்மை தேசமொன்றினை நோக்கிப் பயணிக்கின்ற சமூகம் ஒன்றினை உருவாக்குதல்"**

**"அஸ்வெசும" சமர்த்தி நலன்பரி திட்டத்தின் கீழ் பயனாளிக் குடும்பங்களை வலுவூட்டும் வேலைத்திட்டம் - 2024 - 2026**

**01. அறிமுகம்**

அஸ்வெசும சமூக நலன்புரி திட்டத்தின் கீழ் நன்மைகளைப் பெறுகின்ற பயனாளிகளிலிருந்து இனம் காணப்பட்ட 1.2 மில்லியன் குடும்பங்களை 2024 ஆம் ஆண்டிலிருந்து முன்வரும் 03 வருட காலத்திற்குள் வழுவூட்டும் பொருட்டு அமை.பத்/23/0730/604/073 என்ற அமைச்சரவைத் தீர்மான இலக்கத்தின் மூலம் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் 2024 முதல் 2026 வரை வலுவூட்டும் வேலை திட்டம் தொடர்பில் செயற்பாட்டு வேலைத் திட்டம் ஒன்றினைத் தயாரித்து அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளது.

அந்த வேலை திட்டத்திற்கு அமைய 2024 ஆம் ஆண்டில் மூன்று லட்சம் பயனாளிக் குடும்பங்களை வலுவூட்டுவதற்கு திட்டமிடப்பட்டு அக்குடும்பங்களை இனங்காணுதல் அக்குடும்பங்களுக்குரிய அடிப்படை தகவல்களை சேகரித்தல் உட்பட வலுவூட்டுவதற்குரிய பிற விடயங்கள் தொடர்பில் மாவட்ட பிரதேச மற்றும் கிராம உச்சியோத்தர் பிரிவு மட்டத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியவை தொடர்பில் உத்தியோகத்தர்களை விளக்கமளிக்கும் பொருட்டு சுற்றறிக்கை இலக்கம் 2024/02 இன் மூலம் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன

அதற்கு அமைய கிராம உத்தியோகத்தர் பிரிவு ஒன்றிற்கு இலக்குக் குடும்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பது வலுவூட்டுவதற்கு பொருத்தமான பயனாளி குடும்பங்களை இனங்காணபது ஏலவே மேற்கொள்ளப்பட்டுள்ளது.



1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla

| | අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் தலைமையதிபதி / Director General | අතිරේක අධ්‍යක්ෂ ජනරාල් (පාලන හා ආයතන) / மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி ( நிர்வாகம்/தாபனம்) / Additional Director General (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී / பிரதான கணக்காளர் / Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය) / பணிப்பாளர் (குறு நிதி ) / Director ( Micro Finance) | කාර්යාලය / அலுவலகம் / Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dgsamurdhi@gmail.com | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | Hot Line:0112-885582 | Hot Line: 011- 2887722 |
| | | Hot Line :0112-889007 | | | |

அப்பணிகளின் பின்னர் இனங்காணப்பட்ட குடும்பங்களின் பொருட்டு குடும்ப அபிவிருத்தி திட்டமிடலைது தயாரித்தல் நெறிப்படுத்தல், குழுவினை உருவாக்குதல் பிரதேசம் மற்றும் மாவட்ட மட்டத்தில் வலுவூட்டல் திட்டமிடலைத் தயாரித்தல், இனங்காணப்பட்ட குடும்பங்களின் பொருட்டு பொருளாதார சமூக மற்றும் உள ஆகிய துறைகளின் கீழ் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் கருத்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு நிதி/பண்ட உதவிகள் மற்றும் கடன் வசதிகளை வழங்குதல், வேலைத்திட்ட நடவடிக்கைகளை கண்காணித்தல், முன்னேற்றத்தினை அளவை செய்தல் மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் உட்பட்ட பணிகளின் பொருட்டு தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்காக இச் சுற்றறிக்கை வெளியிடப்படுவது என்பதனை வினயமுடன் அறியத் தருகின்றேன்.

**02. குடும்ப அபிவிருத்தி திட்டமிடலைத் தயாரித்தல்.**

கீழுள்ள ஆலோசனைகளுக்கு அமைய 2024 ஆம் ஆண்டிற்குள் வலுவூட்டும் பொருட்டு ஏற்கனவே இனங்காணப்பட்ட சகல பயனாளிக் குடும்பங்களுக்கும் குடும்ப அபிவிருத்தி திட்டமிடம் ஒன்றினைத் தயாரிப்பது கட்டாயமானதாகும். இப்பணிகள் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் பணியாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் குடும்ப அபிவிருத்தி திட்டமிடலை தயாரித்தல் வேண்டும். இங்கு கிராமிய நெறிப்படுத்தல் குழுக்களின் ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். குடும்ப அபிவிருத்தி திட்டமிடலைத் தயாரிப்பதற்கு இத்துடன் உள்ள இணைப்பு 01 படிவத்தினை பயன்படுத்த வேண்டியதுடன் இக் குடும்ப அபிவிருத்தித் திட்டமிடலைத் தயாரிப்பது 2027.07.31 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்தல வேண்டும்.

1. தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளை சந்தித்து தகவல்களை பெற்றுக்கொள்ளல்/ சேகரித்தல் வேண்டும் இங்கு பயனாளி மற்றும் குடும்பத்தவர்களுடன் கலந்துரையாடுதல் புத்தகங்களை பரிசோதித்தல், கருத்திட்டத்தை பரிசோதித்தல் போன்ற முறைகளை பயன்படுத்தி சரியான தகவல்களை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

2. அஸ்வெசும பயனாளியை அடிப்படையாகக் கொண்டு தகவல்களை சேகரிக்க வேண்டியதுடன் உள மற்றும் சமூக ரீதியான தகவல்களை பெற்றுக் கொள்ளும்போது குடும்பத்தின் சகல அங்கத்தவர்களும் தொடர்புபட்டதாக தகவல்கள் சேரிக்கப்படல் வேண்டும்.

3. இங்கு பயனாளிகள் தொடர்பில் ஏற்கனவே தங்களால் சேகரிக்கப்பட்ட தகவல்கள்/ தரவுகளை பயன்படுத்திக் கொள்ள முடியும். இந்த படிவத்தினை பூர்த்தி செய்யும்போது நிதித் தொகை, எண்ணிக்கை மற்றும் அளவு போன்றவற்றினையும் உட்படுத்திக் கொள்வதற்கு ஆலோசனைகள் வழங்கியுள்ள சந்தர்ப்பம் தவிர்ந்து ஏனைய சந்தர்ப்பங்களில் குறித்த தகவல்களுக்கு முன்னால் என்ற அடையாளத்தினை பதிவேதற்பதற்கு பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

4. இங்கு இணைப்பு 01 படிவத்தினைப் பயன்படுத்தி திட்டமிடலைத் தயாரித்துக் கொள்ளல் வேண்டும். இத்திட்டமிடலானது இரு பிரதிகளில் தயாரித்து அதன் பிரதி ஒன்றினை பயனாளியின் பொறுப்பிலும் மற்ற பிரதியினை குறித்த உத்தியோகத்தரின் கையொப்பத்தினைப் பெற்றுக் கொண்டு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் வைத்துக் கொள்ளல் வேண்டும்.

5. கிராம உத்தியோகத்தர் பிரிவில் வலுவூட்டப்படுகின்ற ஒவ்வொரு பயனாளிகட குடும்பங்களின் நிமித்தம் தயாரித்த குடும்ப அபிவிருத்தித் திட்டமிடலில் உட்படுத்த வேண்டிய தகவல்களை கணினி வலையமைப்பில் பதிவேற்றம் செய்வதற்கு (CRM தொகுதி அல்லது Google Sheet ஊடாக) திட்டமொன்றினை

அறிமுகப்படுத்த எதிர்பார்க்கப்படுவதுடன் அதற்குரிய ஆலோசனைகள் மற்றும் முறைகள் தொடர்பில் எதிர்காலத்தில் விளக்கமளிக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

6. தயாரித்த குடும்ப அபிவிருத்தி திட்டமிடல்களுக்கு அமைய ஒவ்வொரு குடும்பத்தினையும் வலுவூட்ட வேண்டிய துறைகள் மற்றும் வழங்க வேண்டிய வசதிகளை இனங்காண்பதும் அத்தகவல்களை அடிப்படையாகக் கொண்டு கிராமிய பிரதேசம் மற்றும் மாவட்ட அபிவிருத்தி திட்டமிடல்களை தயாரிப்பதும் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன் அதற்குரிய படிவங்களை துரிதமாக அறிமுகப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

7. வேலைத் திட்டத்தினை கண்காணிக்கின்ற உத்தியோகத்தருக்கு / நிறுவனங்களக்கு / பிரிவிற்கு தகவல்களை வழங்குவதற்கும் பயனாளிகளின் நிமித்தம் சேவை வசதிகளை பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பிப்பதற்கு சேவையினை வழங்கும் நிறுவனங்களை ஒருங்கிணைப்பு செய்து கொள்வதற்கும் உதவிகளை பெற்றுக் கொள்வது போன்ற விடயங்களும் மேற்கொள்ள முடியும்.

8. கிராம உத்தியோகத்தர் பிரிவொன்றில் உள்ள இலக்குக் குடும்பங்களின் எண்ணிக்கை இதுவரையில் இனங்காணப்படாத சந்தர்ப்பத்தில் அக்குடும்பங்களின் எண்ணிக்கையினை இனங்கண்டு பூர்த்தி செய்து குடும்ப அபிவிருத்தித் திட்டமிடல்களைத் தயாரித்தல் வேண்டும்.

**03. வலுவூட்டப்படவேண்டிய பிரதான துறைகள் தொடர்பிலான அறிமுகம்.**

I. களத்துறையினை இனங்காணுதல்.

- பொருளாதாரத் துறை
- உளவியல் துறை
- சமூகத் துறை.

II. பொருளாதாரத்துறையில் கீழுள்ள பிரகாரம் தனித்தனியாக இனம் கண்டு அறிக்கையினை தயாரித்துக் கொள்ளல் வேண்டும்.

- பொருளாதாரத் துறையின் கீழ் வலுவூட்டக்கூடிய பயனாளிகளின் எண்ணிக்கை.
- பயனாளிகளால் தெரிவு செய்யப்பட்ட / சமர்ப்பிக்கப்பட வேண்டிய கருத்திட்டங்கள் யாவை என்பதை இனங்காணுதல்.
- தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் பயிற்சிக்கு தேவையான பயனாளிகளை இனங்காணுதல்
- தொழில்/திறன் பயிற்சிகளுக்கு முன்வைக்கக்கூடிய இளைஞர்கள் யுவதிகளை இனங்காணுதல்
- உள்நாட்டு/வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புகளில் ஈடுபடுத்தக் கூடிய இளைஞர் யுவதிகளை இனங்காணுதல்.
- உள்நாட்டு வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளில் முன்வைக்கக் கூடிய ஆட்களையும் துறைகளையும் இனங்காணுதல்.
- ஏற்கனவே வருமானமீட்டும் கருத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்ற அல்லது அவ்வாறான கருத்திட்டத்தினை மேற்கொள்ள ஊக்கத்தினையும் அர்ப்பணிப்பினையும் கொண்ட ஆட்களை இனங்காணுதல்.
- தொழில்நுட்ப பயிற்சி மற்றும் பிற பயிற்சிகளை/அறிவினை வழங்கக்கூடியவர்களை இனங்காணுதல்.

III. உளரீதியான பிரிவிலிருந்து வலுவூட்ட வேண்டிய பயனாளிகள் மற்றும் குடும்பங்களை இனம் காண்பதும் ஆவணப்படுத்தும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல் வேண்டும்.

IV. சமூக ரீதியான வலுவூட்டலினூடாக வலுவூட்டுவதற்கு முன் வைக்க வேண்டிய பயனாளிகள் மற்றும் குடும்பங்களை இனம் காண்பதும் ஆவணப்படுத்துவதும்.

V. கிராம உத்தியோத்தர் பிரிவு மட்டத்தில் தயாரித்த வலுவூட்டப்படுகின்ற பயனாளிப் பெயர் பட்டியலின் பொருட்டு கிராமிய நெறிப்படுத்தல் குழுவின் இணக்கப்பாட்டினை பெற்றுக்கொண்டு பிரதேச செயலாளரின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள வேண்டும்.

VI. இந்த ஆவணங்கள் சமுர்த்தி உத்தியோகத்தர் பொறுப்பில் இருத்தல் வேண்டும்.

04. சமுர்த்தி அபிவிருத்தி உற்றியோகத்தரால் வலுவூட்டப்படுகின்ற அனைத்து குடும்ப அலகுகளின் பொருட்டும் தனித்தனியான கோவை ஒன்றினை தயாரித்து பராமரிக்கப்பட வேண்டும். மேலும் பயனாளி விளக்கம் அளிக்கப்பட்டு பயனாளியாலும் கோவை ஒன்று தயாரிக்கப்படல் வேண்டும். அந்த கோவை தொடர்பில் பின் பணி ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும். தயாரிக்கப்படுகின்ற கோவையில் கீழ் குறிப்பிடப்படுகின்றவை உள்ளடங்கி இருத்தல் வேண்டும்.

i. வலுவூட்ட பொருத்தமான குடும்பங்களை இனம் காண்பதற்காக பூர்த்தி செய்யப்பட்ட குடும்ப தொடர்பான அடிப்படைத் தரவுகள் மற்றும் தகவல்கள் உள்ளடங்கிய விண்ணப்பப்படிவம்.
ii. குடும்ப அபிவிருத்தி திட்டமிடலின் பிரதி ஒன்று (இணைப்பு 01)
iii. வலுவூட்ட வேண்டிய முக்கிய துறைகளை காட்டுகின்ற குறிப்புகள்
iv. பயிற்சிகள்/விளக்கமளிப்புகளில் பங்கேற்பதறைக் குறிப்பிடுகின்ற குறிப்புகள்.
v. கடன் வசதிகளை வழங்குதல் மற்றும் அதன் தொடர்பான விபரங்கள்.
vi. நிதி/பொருட்கள் ரீதியான உதவிகளைவழங்குவது தொடர்பான விபரங்கள்.
vii. குடும்பத்தின் ஆரம்ப நிலை மற்றும் காலத்திற்கு காலம் குடும்பத்தின் பொருளாதாரம் பிற நடவடிக்கைகளில் முன்னேற்றினை காட்டுகின்ற குறிப்புக்கள் (நிதி/நிதியல்லாத)
viii. தற்போதையதும் வலுவூட்டும் காலத்திற்குரியதும் வீட்டின் மற்றும் அதற்குரிய சுற்றாடல் கருத்திட்டத்திற்குரிய புகைப்படமும்.
ix. உத்தியோகத்தர்களின் வருகையும் அவதானிப்பு குறிப்புகளும்
x. வலுவூட்டப்படுகின்ற குடும்பத்திற்கு உரியதான பிற விபரங்கள்.

**05. வலுவூட்டப்படுகின்ற பிரதான துறைகளின் கீழான வேலை திட்டங்கள் / கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.**

தெரிவு செய்யப்பட்ட குடும்பங்கள் கீழுள்ள துறைகளின் கீழ் வலுவூட்டல்கள் மேற்கொள்ளப்பட்டு மூன்று வருட காலத்திற்குள் முழுமையாக வலுவூட்டப்பட வேண்டும்.

**1) பொருளாதாரத்துறை.**

தயாரித்த குடும்ப அபிவிருத்தி திட்டமிடல்களுக்கு அமைய வலுவூட்டப்படுகின்ற பயனாளி / குடும்ப் அங்கத்தவர் அங்கத்தவர்களை கீழே காட்டப்படுகின்ற பொருத்தமான கருத்திட்டம் / பணி எனக்கு தொழிலில் ஈடுபடச் செய்து குடும்பத்தின் நிதி வருமானத்தினை உயர்த்துவதும் வருமானத்தின் நிலைபேறானதாக உருவாக்குவதும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

i. நடைமுறையில் உள்ள வளங்கள் / திறமைகளுக்கு அமைய சுயதொழில் ஒன்றில் ஈடுபடச் செய்தல்.

ii. ஏலவே சுயதொழில் ஒன்றில் ஈடுபட்டிருப்பதாயின் அக்கருத்திட்டத்தினை மேம்படுத்தும் பொருட்டு உதவுதல்.
iii. பயனாளி / குடும்ப அங்கத்தவர்களிடம் உள்ள திறமைகள் / ஆற்றல்களுக்கமைய அதனை அபிவிருத்தி செய்து / மேம்படுத்தி சுயதொழில் ஒன்றில் ஈடுபடச் செய்தல் அல்லது தாங்கள் செய்து வரும் சுய தொழிலை மேம்படுத்துவதற்கு உதவுதல், அல்லது புதிதாக தொழில் ஒன்றில் ஈடுபட செய்தல்.
iv. தொழில் வழிகாட்டல்களை / பயிற்சியினை வழங்கி உள்நாட்டு வெளிநாட்டுத் தொழில் ஒன்றில் ஈடுபடு செய்தல்
v. தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி / திறமையிலிருந்து / தொழில்நுட்ப அறிவு போன்ற பயிற்சிகளை வழங்கி தங்களது வருமான மீட்டல் கருத்திட்டத்தி மேம்படுத்த வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்

சுய தொழிலகளில் பயனாளிகளை ஈடுபடச் செய்யும் போது ஏற்கனவே ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி உதவி வேலை திட்டத்தின் கீழ் பிரதேச மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சந்தைப் பகுப்பாய்வின் (Market Analysis) இன் பிரகாரம் பெற்றுக் கொண்ட தரவுகளைப் பயன்படுத்தி பிரதேசத்திற்குப் பொருத்தமான மற்றும் உள்ளார்ந்த திறனும் உள்ள சுயதொழில் ஒன்றில் ஈடுபட செய்தல் வேண்டும்.

பயனாளிகளுக்கு வசதிகளை வழங்கக்கூடிய விதம்

1. அரசாங்க / தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்பினை பெற்றுக்கொண்டு அறிவுப் / பயிற்சி வழிகாட்டல்களை வழங்குதல்.
2. திறைசேரி நிதியத்தின் கீழ் திணைக்களம், பிரதேச மற்றும் மாவட்ட அபிவிருத்திக் குழுக்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற மற்றும் அறிமுகப்படுத்தும் கருத்திட்டங்கள் மூலம் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
3. திணைக்களத்தின் வழிகாட்டுதல்களின் பிரகாரம் உறிய பயிற்சி நிலையங்களை நாடச் செய்தல்.
4. சமுர்த்தி வங்கி வலையமைப்பின் ஊடாக வங்கிக் கடன் வசதிகளை வழங்குதல்.
5. நிதி உதவி / பொருளாதார உதவிகளை வழங்கும் நிறுவனங்களை ஒருங்கினைப்புச்செய்தல்.
6. ஆசிய அபிவிருத்தி வங்கி / உலகவங்கி / ஜப்பான் சமூக அபிவிருத்தி நிதியம் ஆகிய நிதியுதவி வேலைத்திட்டங்களின் கீழ் வழங்கப்படுகின்ற நிதியுதவிகள் / நன்மைகள் ஊடாக சேவைகளை வழங்குதல்.
7. தனியாள் பிரிவினை செயற்படுத்திக் கொண்டு உற்பத்திச் சந்தை வலையமைப்புக்களை உருவாக்குதல்.

**2) உளவியல் ரீதியான துறை**

தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களின் பிரதான குடியிருப்பாளர் / அங்கத்தவர்களின் மனப்பாங்கினை அபிவிருத்தி செய்தல், மனநோய் நிலையிலிருந்து மீட்டெடுத்தல் நல்ல உணர்வுகளை மேம்படுத்தல், உளவளத்துணை சேவைகளை சேவைகளை வழங்குதல் மற்றும் மதுபானம் / போதை பொருளுக்கு அடிமையாதல் போன்றவற்றிலிருந்து மீட்டெடுத்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு சிக்கல்களையும் பிரச்சினைகளையும் தீர்த்துக்கொண்டு சிறந்த மனப்பாங்குடன் உள்ள மக்களை உருவாக்குவதும், அவர்களை பொருளாதார ரீதியாக முன்னெடுத்துச் செல்வதற்கு துணையொன்றாகும் என்ற வகையில் கீழுள்ள உளவியல் ரீதியான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் வேண்டும்.

1. மனநோய் நிலைக்கு முகம் கொடுப்போரை உளசிகிச்சையகங்களுக்கு முன்வைத்தல்
2. மன அழுத்தங்களினால் பாதிப்புற்றோர்களின் பொருட்டு உளவளத்துணையினை வழங்குதல்.

3. மதுபானம் / போதைப்பொருள் / புகைத்தல் / சூது விளையாடுதல் அல்லது பிற தீய விடயங்களில் அடிமையானவர்களின் பொருட்டு உளவளத்துணை வேலைத்திட்டங்களை நடாத்துவதும் அதற்கான சூழலை உருவாக்குவதும்.
4. சிறந்த மனப்பாங்கு / படைப்பாக்க சிந்தனைகள் / ஆளுமை விருத்தி / சவால்களுக்கு முகங் கொடுத்தல், தனிநபர் அபிமானத்தினை உருவாக்குதல் விழிப்புணர்வுகள் / பயிற்சி வேலைதிட்டங்களில் ஈடுபடச் செய்தல்.
5. நிதிமுகாமைத்துவம் / நேர முகாமைத்துவம் / பணி முகாமைத்துவம் / வேலைத்திட்டங்களில் ஈடுபடுத்தல்.
6. இளவயது சுகாதார உளவளத்துணை (18 வயதினை தாண்டிய இளைஞர்கள்) யுவதிகளின் மன அழுத்தம், விரக்தி நிலைக்குள்ளாதல் அடிமைப்படுதல் போன்ற விடயங்கள் தொடர்பில்)

இப்பணிகளின் பொருட்டு விசேட அறிவு / பயிற்சி / நிபுனத்தினையுடைய பயிற்றுனர்கள் அல்லது உளவியலாளர்களின் சேவையினைப் பெற்றுக்கொள்ள வேண்டியத்துடன் அதன் பொருட்டு மகளிர் சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் உளவளத்துணைப் பிரிவின் ஒத்துழைப்பினை வழங்க இணங்கியுள்ளதுடன் தங்களது பிரதேச செயலக பிரிவில் இது தொடர்பான சேவைகளை வழங்கும் உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொண்டு இப்பணிகளை மேற்கொள்வதும் பின்பணிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

### 3. சமூக ரீதியான வலுவூட்டல்கள்

தனிநபர், குடும்பம், சமூகம் மற்றும் என்ற கிராமம் வகையில் ஒவ்வொரு தரத்தின் பொருட்டு பொருத்தமான கீழுள்ள வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்துதல் வேண்டும்.

1. குழு செயற்பாடுகளை உருவாக்குதல், உதாரணமாக சிறு குழுக்களை உருவாக்குதல் சிரமதானப்பணிகளை மேற்கொள்ளல் போன்றவை.
2. சங்கங்கள் / அமைப்புகளை கட்டியெழுப்புதல், தலைமைத்துவத்தினை வழங்குதல், கூட்டுச் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
3. சிறுவர் / இளைஞர் / முதியோர் உட்பட ஆண் பெண் என்று வகையில் அமைப்பு ரீதியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
4. சமய விவகாரங்களை ஒழுங்கு செய்தல்.
5. சிறார்கள், மாணக்களின் பொருட்டு கல்வி மற்றும் கலாசார வேலைத்திட்டங்களை செயற்படுத்துதல்.
6. சுகாதாரம் / போசாக்கு போன்ற வேலை திட்டங்களை நடாத்துதல்.
7. பொருளாதார நடவடிக்கைகளுக்காக விற்பனை / உற்பத்திகள் அமைப்புகளை கட்டியெழுப்புதல்.
8. மனை மற்றும் சமூக மட்டத்தில் குடும்பம் மற்றும் ஆட்கள் முகம்கொடுக்கின்ற பிரச்சனைகளுடனான சந்தர்ப்பங்களில் சட்டரீதியான வலுவூட்டலுக்குறிய விழிப்பூட்டல்களை மேற்கொள்ளல்.
9. மனை / நிதி முகாமைத்துவ வேலைத்திட்டங்களை நடாத்துதல்.
10. வீட்டு வன்முறை / குடும்ப பிரச்சினைகளை குறைப்பதற்குறிய வேலைத்திட்டங்களை நடாத்தி சமூக ரீதியான துறையில் வலுவூட்டுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்
11. முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளை வலுவூட்டும் பொருட்டு பொருத்தமான வேலைத்திட்டங்களை இனம் கண்டு நடைமுறைப்படுத்துதல்.

மேற்சொன்ன முக்கிய துறைகள் தொடர்பில் சமுர்த்தி அபிவிருத்தித்திணைக்களத்தின் கீழ் குறிப்பிடப்படும் அபிவிருத்தி பிரிவுகளால் எதிர்காலத்தில் வேலைதிட்டங்களை நடாத்துதல், மற்றும் ஒழுங்கு செய்தல், மற்றும் அதன் பொருட்டு தகுதியான பயிற்றுனர்களை அறிமுகப்படுத்துதல், ஒதுக்கீட்டு நிதிகளை வழங்குதல், தொடர்பில் மேலும் அதிகமாக ஆலோசனை வழங்குதல்.

| துணை | பொறுப்பு வங்கிப் பிரிவு |
|---|---|
| 1. பொருளாதார வலுவூட்டுதல் | i. வாழ்வாதார அபிவிருத்திப் பிரிவு<br>ii. தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு<br>iii. குறுநிதிப் பிரிவு |
| 2. உளவியல் வலுவூட்டுதல் | i. சமூக அபிவிருத்திப் பிரிவு<br>ii. சமுதாய அடிப்படை அமைப்புபட பிரிவு<br>iii. சட்டப் பிரிவு |
| 3. சமூக அபிவிருத்திப்பிரிவு | i. சமூக அபிவிருத்திப் பிரிவு<br>ii. சமுதாய அடிப்படை அமைப்புப் பிரிவு<br>iii. சட்டப் பிரிவு |
| 4. பயிற்சி மற்றும் விழிப்பூட்டல் வேலைத்திட்டங்கள் | i. பயிற்சிப் பிரிவு – வலுவூட்டல் வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்குறியதாக உத்தியோகத்தர்களை விளக்கமளித்தலும் பயிற்றுவித்தலும் |
| 5. கண்காணிப்பு மற்றும் பின்பணி அய்வினை மேற்கொள்ளல் | i. திட்டமிடல் பிரிவு – முன்னேற்ற மீளாய்வினை மேற்கொள்வதும் அறிக்கையினைப் பெற்றுக் கொள்வதும்<br>ii. தகவல் தொழில்நுட்பப் பிரிவு – தகவல்களை கணினிமயப்படுத்தல், இற்றைப்படுத்துதல் மற்றும் பகுப்பாய்வு செய்தல். |

## 06. நெறிப்படுத்துதல் குழுக்களை உருவாக்குதல், பணிப்பொறுப்புகளை நிறைவேற்றுதல், மற்றும் சேவை வசதிகளை வழங்குதல்

### 6.1 நெறிப்படுத்தல் குழுவினை தாபிப்பதும் நெறிப்படுத்துதல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதும்

இலக்கிடப்பட்ட மக்கள் முகம் கொடுக்கின்ற வசதி வாய்ப்புகளற்ற கற்ற சமூக பொருளாதார மற்றும் உள நிலைகளை விசாரித்து அவர்களிடம் உள்ள உள்ளார்ந்த பலத்தினை மேலோங்க செய்தல் நிலைபேறான வாழ்வாதார அபிவிருத்தி பிரிவிற்கு முன்வைக்கப்படும் வலுவூட்டும் வேலை திட்டங்களின் நடைமுறைப்படுத்தும் பொருட்டு கிராமிய பிரதேச மாவட்ட மற்றும் தேசிய மட்டத்தில் அபிவிருத்தி கட்டமைப்புகளை தயாரித்தல் செயல்படுத்துதல் மற்றும் நெறிப்படுத்தலின் பொருட்டு பல்வேறு மட்டத்திலான நெறிப்படுத்தல் குழுக்கள் நான்கு 04 தாபிக்கப்படும். இதன் பொருட்டான அதிகாரம் அளிக்கப்படும் உத்தியோகத்தர்களால் நெறிப்படுத்தல் குழுவின் பொருட்டு உறுப்பினர்களை நியமித்தல், குழுவினை கூட்டுதல், மற்றும் குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பனி பொறுப்புகளை நிறைவேற்றுவது ஒருங்கிணைப்பு செய்யப்பட வேண்டும்.

#### 6.1.1 கிராமிய நெறிப்படுத்தல் குழு

ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கும் கீழுள்ள உத்தியோகத்தர்கள் / அங்கத்தவர்கள் உள்ளடங்குகின்ற பிரகாரம் கிராமிய நெறிப்படுத்தல் குழுவினை தாபித்தல் வேண்டும்.

**குழு அமைப்பு**

- பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் (தலைவர்)
- சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் (ஏற்பாட்டாளர்)
- கிராம உத்தியோகத்தர்

- விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி அபிவிருத்தி உத்தியோகத்தர்
- பிரதேச / நகரசபை மக்கள் பிரதிநிதிகள்
- சமுதாய அமைப்பு தலைவர்கள் (சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு, மகளிர் சங்கங்கள் மரணாதார சங்கங்கள், விவசாய அமைப்புக்கள்)
- வாழ்வாதார / சமூக அபிவிருத்தி சேவைகளை வழங்கும் நேரொத்த நிறுனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் உத்தியோகத்தர்கள்.

**கிராமிய நெறிப்படுத்தல் குழுவின் பணி பொறுப்புகள்**

- ஆய்வுத்தரவுகளின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட வலுவூட்டப்பட்ட குடும்பங்களின் தகவல்களை உறுதிப்படுத்திக்கொள்வதும் வருடாந்தம் வலுவூட்டப்படுகின்ற குடும்பங்களை இனங்காண்பதும் தேவைகளை ஆவணப்படுத்துவதும்.
- வலுவூட்டப்படுகின்ற குடும்பங்களுக்காக தயாரிக்கப்பட்ட குடும்ப அபிவிருத்தித் திட்டமிடலின் பொருட்டு சிபாரிசுகளை வழங்குதல்.
- இலக்கிடப்பட்ட குடும்பங்களை விளக்கமளித்தல், உள மற்றும் சமூக ரீதியான உளவளத்துணை, வளங்கள், வாய்ப்புகளை வழங்குதல் போன்ற நடவடிக்கையினை ஒருங்கிணைப்பு செய்தல்.
- உதவிச்சேவைகளை வழங்கும் நிறுவனங்களை ஒருங்கிணைப்புச் செய்தல்.
- குடும்ப அபிவிருத்தி திட்டமிடலின் பொருட்டு இணக்கப்பாட்டினை வழங்குதல் மற்றும் அதனை அடிப்படையாகக் கொண்டு கிராமிய பிரிவுகளின் அபிவிருத்தி திட்டங்களை தயாரிக் தலைமை வகித்தல்.
- அபிவிருத்திச் செயற்பாடுகளை ஆரம்பித்தல் மற்றும் மேம்படுத்தல்.
- கிராமிய திட்டமிடலை பிரதேச குழுக்களுக்கு சமர்ப்பிப்பதும் ஒருங்கிணைப்பு செய்வதும்.
- கிராமிய அபிவிருத்தி வேலை திட்டங்களை செயற்படுத்துவதும் தகவல்களை அறிக்கையிடுவதும்..

அங்கத்தவர்களை நியமிப்பது பிரதேச செயலாளர்களா 2024.07.31-ம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்படல் வேண்டும். இதன் பொருட்டு தலைமைப்பீடம முகாமையாளர்கள் / வங்கிச் சங்க முகாமையாளர்களால் ஒத்துழைப்பினை வழங்குதல் வேண்டும்.

கிராமிய நெறிப்படுத்தல் குழுக்கூட்டம் 03 மாதத்திற்கொருமுறை நடாத்தப்பட வேண்டியதுடன் தேவைக்கேற்ப மாதத்தின் ஒரு முறையும், கூட முடியும்.

**6.1.2 பிரதேச நெறிப்படுத்தல் குழு**

மக்களை உளவியல், சமூக, பொருளாதார ரீதியாக வலுவூட்டச் செய்யும் பணிகளுக்குச் சொந்தமான அபிவிருத்தி வேலை திட்டங்களை பிரதேச மட்டத்தில் திட்டமிடுவது மற்றும் நெறிப்படுத்துவது இதன் குறிக்கோளாகும் குழு அங்கத்தவர்களை நியமிப்பது பிரதேச செயலாளரின் பணிப்பொறுப்பாகும். இந்த நியமனமானது 2024.07.31 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**குழு அமைப்பு**

- பிரதேச அபிவிருத்திக் குழுத் தலைவர் (தலைவர)
- பிரதேச செயலாளர் (ஏற்பாட்டாளர)

- திட்டமிடல் உதவிப் பணிப்பாளர்
- தலைமைப்பீட சமுர்த்தி முகாமையாளர், அல்லது வங்கிச்சங்க முகாமையாளர்கள்
- சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள்
- சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர்கள்
- கமநல அபிவிருத்தி பிரதேச உத்தியோகத்தர்
- விவசாய ஆலோசகர்
- சமுர்த்தி வங்கிச் சங்க நிறைவேற்று குழுத் தலைவர்கள்
- பிரதேச சமுதாய அடிப்படை அமைப்புத் தலைவர்கள்
- வாழ்வாதார / சமூக அபிவிருத்தி சேவைகளை வழங்கும் நேரொத்த நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் உத்தியோகத்தர்கள்

**பிரதேச நெறிப்படுத்தல் குழுவின் பணிப் பொறுப்புக்கள்**

- கிராமிய குழுக்களை தாபிப்பதும் பொறுப்புக்களை ஒப்படைப்பது தொடர்பில் விளக்கமளித்தலும்
- கிராமிய தேவைகளின் பொருட்டு மனித, பௌதீக மற்றும் நிதி வளங்களை இனம்காணுதல்
- பிரதேச மட்டத் தேவைப்பாடுகளின் பொருட்டு மனித, பௌதீக, மற்றும் நிதி வளங்களை இனம் காணுதல்
- கிராமிய திட்டமிடலின் பொருட்டு அங்கீகாரத்தை வழங்குதல்
- பிரதேுச வளமுகத் திரட்டினை தயாரித்தல்
- பிரதேச அபிவிருத்தி திட்டங்களை தயாரிப்பதும் சிபாரிசு செய்வதும்.
- பிரதேச மட்ட வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதும் பின்பணி ஆய்வுகளை மேற்கொள்வதும்.
- மாவட்ட மற்றும் கிராமிய மட்டத்தில் குழுக்களை ஒருங்கிணைப்பு செய்தல்.

பிரதேச நெறிப்படுத்தல் கூட்டத்தினையும் 03 மாதத்திற்கொருமுறை நடாத்துதல் வேண்டும் தேவைக்கு ஏற்ப மாத்தின் ஒரு முறையும் கூட்ட முடியும்

### 6.1.2 மாவட்ட நெறிப்படுத்தல் குழு

வலுவூட்டும் பணிகளுக்கு சொந்தமான அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மாவட்ட மட்டத்தில் திட்டமிடுவது மற்றும் நடைமுறைப்படுத்துவது மற்றும் பின் பணிகளை மேற்கொள்வது இதன் குறிக்கோளாகும். குழு அங்கத்தவர்கள் நியமிப்பது மாவட்ட செயலாளர் / மாவட்ட சமுர்த்தி மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதியால் 2024.07.31ம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்படல் வேண்டும் .

**மாவட்ட குழு**

- மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் (தலைவர்)
- மாகாண பிரதம செயலாளர் அல்லது நியமிக்கப்படுகிபின்ற உத்தியோகத்தர்.
- மாவட்ட செயலாளர் (ஏற்பாட்டாளர்)
- மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்
- மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர்

- மாவட்ட விவசாயப் பணிப்பாளர்
- விடயப்பொறுப்பு அமைச்சரால் நியமிக்கப்படுகின்ற பிரதிநிதி ஒருவர்
- மாவட்ட சமுர்த்தி பிரதி / உதவிப் பணிப்பாளர்கள்
- மாவட்ட சமுர்த்தி வாழ்வாதார / சமூக அபிவிருத்தி / வங்கி விடயப் பொறுப்பு முகாமையாளர்கள்.
- மாகாணத்தினை பிரதிநிதித்துவம் செய்யும் சமுர்த்தி வங்கிச் சங்க நிறைவேற்றுக் குழுத் தலைவர்
- வாழ்வாதார / சமூக அபிவிருத்தி சேவைகளை வழங்கும் நேரொத்த நிறுவனங்களை பிரதிநிதித்துவம் செய்யும் உத்தியோகத்தர்கள்
- செயற்பாடு உள்ள அரசு சார்பற்ற அமைப்பு பிரதிநிதிகள் (சர்வோதயம், சனச)

**மாவட்ட நெறிப்படுத்தல் குழுவின் பணி பொறுப்புக்கள்**

- பிரதேச மட்டத்தில் தயாரிக்கப்பட்ட அபிவிருத்தி திட்டமிடலை ஒன்று திரட்டி மாவட்ட அபிவிருத்தி திட்டமிடலை தயாரிப்பதும் சிபாரிசுகளை வழங்குவதும்.
- மாவட்ட அபிவிருத்தி திட்டமிடலை சிபாரிசு செய்தல்
- கிராமிய மற்றும் பிரதேசம் மட்டம் வரை வசதிகளை வழங்குவதற்கு வேலைத்திட்டம் ஒன்றினை தயாரித்தல்
- இனங்காணப்பட்ட விசேட கருத்திட்டங்களை பிரதேச மட்டத்தில் வழங்குதல்
- அறிக்கைகளைத் தயாரிப்பதும் சமர்ப்பிப்பதும்.
- பிரதேச அபிவிருத்தித் திட்டங்களில் உள்ளடக்கப்பட்ட கருத்திட்டங்களை உரிய நேரொத்த நிறுவனங்களுக்கு சமர்ப்பிப்பதும் நேரொத்த நிறுவனங்கள் ஊடாக செயற்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்களின் பொருட்டு பிற நிதிமூலங்களிலிருந்து நிதியங்களைப் பெற்றுக் கொள்வதும் நடைமுறைப்படுத்தவதும்.
- பிரதேச மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்களை பின்பணி ஆய்வு செய்தல்.

மாவட்ட நெறிப்படுத்தல் குழுக்கூட்டத்தினை 03 மாதத்திற்கொருமுறை நடாத்த வேண்டியதுடன் தேவைக்கேற்ப மாதத்திற்கொருமுறையும் கூட்ட முடியும்

**6.2.4. தேசிய நெறிப்படுத்தல் குழு**

வலுவூட்டும் தேசிய கூட்டுத் திட்டமிடலை நடைமுறைப்படுத்தத் தேவையான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குதல், முன்னேற்றத்தினை மீளாய்வு செய்தல், மற்றும் கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் போது உருவாகின்ற பிரச்சினைகளை இனங்கண்டு அதற்கான தீர்வுகளை சமர்ப்பிக்கும் நோக்கில் இக்குழு அமைக்கப்படுகின்றது.

**தேசிய நெறிப்படுத்தல் குழு**

- கௌரவ ஜனாதிபதி – தலைவர்
- கௌரவ பிரதமர் - இணைத் தலைவர்
- வலுப்படுத்துகை கௌரவ இராஜாங்க அமைச்சர்
- மாகாண ஆளுனர்கள்
- செயலாளர், மகளிர், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு (ஏற்பாட்டாளர்)

- செயலாளர் - பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு
- செயலாளர் - நிதி அமைச்சு
- ஏனைய அமைச்சுக்களின் செயலாளர்கள்
- பணிப்பாளர தலைமையதிபதி – சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம்
- பணிப்பாளர் நாயகம் - தேசிய திட்டமிடல் திணைக்களம்
- சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் அபிவிருத்தி பிரிவுப்பொறுப்பு பணிப்பாளர்கள்,
- அமைச்சரால் நியமிக்கப்படுகின்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கையானது 05 ஆகும்.

**தேசிய நெறிப்படுத்தல் குழுவின் பணிப்பொறுப்புக்கள்**

- மாவட்ட மட்டத்தில் தயாரிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டமிடலை ஒன்று திரட்டி தயாரித்த தேசிய அபிவிருத்தித் திட்டமிடலைத் நடைமுறைப்படுத்தம் முன்னேற்றத்தினை ஆராய்ந்து பார்த்தல்
- மாவட்ட, பிரதேச மற்றும் கிராமிய திட்டமிடல்களில் உள்ளடங்கியுள்ள விசேட கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குரிய நேரொத்த நிறுவனங்களுக்கு ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் நேரொத்த நிறுவனங்களின் ஊடாக செயல்படுத்தப்படாத கருத்திட்டங்களின் பொருட்டு பிற நிதி மூலங்கள் ஊடாக நிதி ஒதுக்கீட்டினை பெற்றுக்கொள்வதற்கு வழிகாட்டல்களை வழங்குதல்
- மாவட்ட மற்றும் பிரதேசம் மட்டத்தில் செயல்படுத்தப்படும் கருத்தித்திட்டங்கள் தொடர்பாக பின்பணி ஆய்வுகளை மேற்கொள்வதும் முன்னேற்றத்தினை மீளாய்வு செய்வதும்.
- கருத்திட்டத்தினை செயற்படுத்தும் போது உருவாகும் பிரச்சினைகளை இனங்காண்பதும் தீர்வுகளை முன்வைப்பதும்.

## 07. வலுவூட்டல் வேலைத்திட்டத்தின் நிதித் திட்டமிடல்

மூன்று வருட திட்டமிடலுக்கேற்ப (2024 - 2026) குடும்பங்களை வலுவூட:டும் வேலைதிட்டத்தினை நடைமுறைப்படுத்தும் பொருட்டு நிதியங்களை பெற்றுக் கொள்ளல் மற்றும் நிதியங்களை செலவிடுதல் தொடர்பில் தேசிய நிதியியல் திட்டமிடல் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

### 7.1 வேலைத்திட்டங்களின் பொருட்டு செலவுகளை மேற்கொள்ளல்

2024 ஆம் ஆண்டிற்குரிய இலக்குக் குடும்பங்களை 300000 ஐ வலுவூட்டும்போது, கீழுள்ள செலவுகளை மேற்கொள்ள எதிர்பார்ப்பதுடன் வேலைத்திட்டத்தின் மொத்த செலவானது ரூ.மில் 30.233 ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதன் பொருட்டு தற்போது உத்தேச நிதிய மூலங்கள் இனங்காணப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் கிராம, பிரதேச, மாவட்ட மற்றும் தேசிய மட்டத்தில் வேலைத் திட்டங்களை இனங்காணப்படடதன் பின்னர் கீழுள்ள வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நிதியங்களை கோருவது மற்றும் செலவிடுவது தொடர்பில் ஆலோசனைகள் திணைக்களத்தினால் வழங்கப்படும்.

i. உத்தியோகத்தர்களை விளக்கமளிப்பதும் பயிற்றுனர்களுக்கு பயிற்சிகளை (TOT) வழங்குவதும்.
ii. வேலைத்திட்டம் தொடர்பில் பயனாளிகளை விளக்கமளிப்பதும் இனங்காண்பதும்.
iii. தொழில் முயற்சியாண்மை / திறன் பயிற்சிகளை வழங்குதல்
iv. பொருளாதார, சமூக மற்றும் உளரீதியான வலுப்படுத்தலுக்குறிய வேலைத்திட்டங்களை இனங்காண்பதும் நடைமுறைப்படுத்துவதும்

v. நெறிப்படுத்தல், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவம்

vi. மென்பொருள் தொகுதி மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, வலையமைப்புச் சேவைக் கட்டணம் மற்றும் கருத்திட்ட முகாமைத்துவம்.

vii. கருத்திட்டத்தின் பின்பணி ஆய்வினை மேற்கொள்ளல்.

viii. முன்னேற்றமீளாள்வு மற்றும் நிர்வாகம்

7.2 நிதியை கூற்றுகள்

i. திறைசேரி நிதி ஒதுக்கீடு

ii. ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி

iii. உலக வாங்கி நிதியுதவி

iv. ஜப்பான் சமூக அபிவிருத்தி நிதிய அன்பளிப்புக்கள்

v. சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்க நிதியங்கள்

vi. பிற அமைச்சுக்கள் மற்றும் நேரொத்த நிறுவனங்களின் நிதி ஒதுக்கீடுகள்

vii. தனியார் பிரிவு / உள்ளூர் தொண்டர் அமைப்புகளின் அன்பளிப்புக்கள்.

7.3 வலுவூட்டும் வேலைத் திட்டத்தின் பொருட்டு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு சுயதொழில் ஒன்றையோ அல்லது பொருளாதார ரீதியான பணியொன்றில் ஈடுபடுச் செய்யும் போது மேற்படி நிதியக் கூறுகளிலிருந்து நிதியியல் பொருள் அல்லது பிறிதொரு ஒரு உதவியினை வழங்கும் போது பயனாளிகளாலும் நிதி / பொருள் / உழைப்பு ஆகியவற்றில் ஏதேனும் ஒரு விதத்தில் பங்களிப்பினை வழங்குதல் வேண்டும்

7.4 தெரிவு செய்யப்படுகின்ற குடும்பங்களின் பொருளாதார வலுவூட்டல் நடவடிக்கைகளின் பொருட்டு நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள சுய தொழில், சிறு தொழில் முயற்சிகள், மற்றும் விவசாய கருத்திட்டங்களுக்கு தேவையான நிதியில் மூலதனத்தின் நிமித்தம் கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது சமுர்த்தி வங்கி / வங்கிச் சங்கங்களினால் மேற்கொள்ளப்படல் வேண்டும். இந்த வேலை திட்டத்திற்காகவே விசேட கடன் திட்டமொன்றினை அறிமுகப்படுத்துவதற்கும் உத்தேசித்துள்ளது.

7.5 ADB உலகவங்கி அல்லது ஜப்பான் சமூக அபிவிருத்தி நிதியம் ஆகிய நிதியுதவிகள் அல்லது அன்பளிப்புகளை வழங்குகின்ற வேலைத்திட்டம் ஒன்றின் கீழ் வலுவூட்டல் வசதிகளை வழங்குகின்ற கிராம உத்தியோகத்தர் பிரிவொன்றிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு நிதி / பொருள் வசதிகளை வழங்குகின்ற சந்தர்ப்பத்தில் அப்பிரிவின் இந்த வேலைதிட்டங்களின் கீழ் நன்மைகள் கிடைக்கபெறாத வலுவூட்டப்படுகின்ற பயனாளிகள் இருப்பின் அவர்களுக்கு திணைக்களத்தின் ஊடாக செயற்படுத்தப்படும் வலுவூட்டல் தேசிய வேலை திட்டத்தின் கீழ் வசதிகளை வழங்குதல் வேண்டும்.

இருப்பினும் உள / சமூக வலுவூட்டலின்கிழ் நடாத்தப்படும் பயிற்சிகள் / விழிப்பூட்டல்கள் / அனபுவும் பரிமாற்றம் / அணி திரட்டுதல் / சமய வேலைத்திட்டங்கள் / கலாச்சாரம் போன்ற வேலைத் திட்டங்குளின் கீழ் நிதியங்கள் கிடைக்கபெறும் நிறுவனங்களை கவனத்திற்கொள்ளாது சகல பயனாளிகளையும் கலந்து கொள்ள செயவ்து / ஈடுபடச் செய்தல் வேண்டும்.

**08. சமுர்த்தி வங்கி / இலக்கிடப்பட்ட சங்கங்களின் பணிப் பொறுப்புக்கள்**

i. குடும்பங்களின் பொருளாதார வலுவூட்டல்களுடன் இணைந்ததாக வருமானமீட்டல் கருத்திட்டங்களை இனங்கண்டு மக்களுக்கு அறிமுகப்படுத்துதுதல்.

ii. வலுவூட்டுகின்ற குடும்பங்களில் உள்ள இளைஞர் / யுதிகளின் பொருட்டு தொழிற்பயிற்சி / ஆற்றல் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை அறிமுகப்படுத்துவதும் ஈடுபடச்செய்வதும்.

iii. சமுர்த்தி வங்கி / வங்கிச் சங்கங்கள் ஊடாக செயற்படுகின்ற கடன் வேலைதிட்டங்கள் தொடர்பில் விளக்கமளித்தல் மற்றும் தகுதிகள் தொடர்பில் விளக்கமளிப்பது ஒத்துழைப்பினை வழங்குவதும்.

iv. சமுர்த்தி வங்கி / வங்கிச் சங்க கடன் வசதிகளை வழங்குதல்.

v. வருமானமீட்டல் / வாழ்வாதார நடவடிக்கைகளின் பொருட்டு உதவிச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களை ஒருங்கிணைப்புச் செய்தல்.

vi. சந்தைத் தேவைப்பாடுகளை ஏற்படுத்தி கொடுத்தல், தொழில்நுட்ப அறிவு / பயிற்சி / உபகரண வசதிகளை வழங்குதல்.

vii. வருமானமீட்டல் கருத்திட்டங்களின் பின்பணி ஆய்வுகளை மேற்கொள்வதும் வழிகாட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொளவதும்.

viii. சமுதாய அடிப்படை அமைப்பு / கட்டுப்பாட்டு சபை / நிறைவேற்றுக் குழு / பிரதேச அமைப்புத் தலைவர்களை விளக்கமளிப்பதும் வழிகாட்டுவதும்.

ix. நெறிப்படுத்தல் குழு மற்றும் கண்காணிப்பு குழுக்களுக்கு ஒத்துழைப்பினை வழங்குவதும் தேவையான தகவல்கள் தரவுகளை வழங்குதல்.

x. தகவல்களை சேகரித்தல், தரவுகளை பதிவேற்றுதல் பகுப்பாய்வு மற்றும் தகவல்களை வழங்கத் துணைபுரிதல்.

**09. பின் பணி ஆய்வுகளை மேற்கொள்ளுவதும் கண்காணிப்புகளை மேற்கொள்வதும்.**

**9.1 கருத்திட்ட கண்காணிப்பு குழுவினை உருவாக்குதல்**

வலுவூட்டல் வேலை திட்டத்தின் செயற்பாட்டு நிலை, மற்றும் அதன் பொருட்டு பயன்படுத்திக் கொள்ளப்படுகின்ற நிதியங்கள் வேலை திட்டத்தின் குறிக்கோள்களின் பொருட்டு பயனுள்ள விதத்தில் பயன்படுத்தப்படுகின்றதா? என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு வேலை திட்டத்தின் நிரந்தர நிலைப்பாட்டுத் தன்மையினை உறுதிப்படுத்தும் பொருட்டும் மகளிர், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு மற்றும் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களமும் கூட்டிணைந்து முறையான கண்காணிப்பு (Supervision) மற்றும் நெறிப்படுத்தல் (Monitoring) பொறிமுறையொன்றினை நடைமுறைப்படுத்துவதுடன் அதன் கீழ் தேசிய மாவட்ட பிரதேச மற்றும் கிராமிய மட்ட வரையிலான நான்கு கண்காணிப்பக் குழுக்கள் தாபிப்பதுடன் அக் கன்காணிப்பு குழுவின் ஊடாக வேலைத் திட்டங்களை கண்காணிப்பதற்கு நெறிப்படுத்துவதற்கு மற்றும் பின் பணியினை மேற்கொள்ள எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

**9.2. கிராமியக் கண்காணிப்புக் குழு**

வலுவூட்டத்தின் கீழ் இன் மட்ட நடவடிக்கைகளை கண்காணிப்பற்கு இக்குழு அமைக்கப்பட்டுள்ளது. பிரதேச செயலாளரால் குழு அங்கத்தவர்கள் நிடயமிக்கப்படல் வேண்டும்.

**குழு அமைப்பு**

- சர்வமத தலைவர்கள்
- சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் (ஏற்பாட்டாளர்)
- கிராமிய மக்கள் தலைவர்கள் இருவர் (முதியோர் மற்றும் சுயசக்தி அமைப்பினைப் பிரதிநிதித்துவம் செய்து)
- மகளிர் பிரதிநிதிகள் இருவர் (மகளிர் சங்கங்கள் மற்றும் சமுதாய அடிப்படை அமைப்பு)
- இளைஞர் சேவைகள் மற்றும் அல்லது இளைஞர் கழக பிரதிநிதிகள்.
- கிராமிய கண்காணிப்புக்குழுவின் பணிப் பொறுப்புக்கள்.
- கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டங்களை கண்காணிப்பதும் மதிப்பிடலும்
- முன்னேற்ற அறிக்கை மற்றும் தரஆய்வு அறிக்கை தொடர்பில் ஆராய்ந்து பார்த்தல்.
- மீள் போசனைப் பட்டறைகளை ஒழுங்கு செய்தல்.
- கிராமியக் குழு மற்றும் பிரதேச குழுக்களுக்கிடையே ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

**9.3 பிரதேச கண்காணிப்புக் குழு**

வலுவூட்டல் வேலைத்திட்டத்தின் கீழ் பிரதேச மட்டத்தில் செயற்படுத்தப்படுகின்ற வேலைத்திட்டங்களின் செயற்திறனையும், பயனுறுதியினையும் உயர்த்தும் பொருட்டு கண்கானிப்பு நெறிப்படுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுதல் பிரதேச செயலாளரால் குழு அங்கத்தவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

**பிரதேச கண்காணிப்புக் குழுவின் அமைப்பு**

- பிரதேச செயலாளர் (ஏற்பாட்டாளர்)
- கிராமிய கண்கானிப்புக் குழுவின் பிரதி நிதித்துவம் செய்து ஒரு கிராமிய குழுவிலிருந்து ஒரு பிரதிநிதி ஒருவர் (கிராம உத்தியோகத்தர் தவிர்ந்த)

**பிரதேச கண்காணிப்புக் குழுவின் பணிப்பொறுப்புக்கள்**

- பிரதேச அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் செயற்பாடுகளை கண்கானிப்பதும் மதிப்பிடுவதும்.
- முன்னேற்ற அறிக்கை, மற்றும் தர அறிக்கையினை ஆராய்தல்
- மீள் யோசனை பட்டறைகளை ஒழுங்கு செய்தல்
- பிரதேச மற்றும் மாவட்டக் குழுவினை ஓருங்கிணைப்புச் செய்தல்.
- உதவிச் சேவை நிறுவனங்கள் மற்றும் வேலைத்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்தல்.
- பிரதேச வேலைத்திட்டங்களின் ஒழுங்கமைப்புக்குறிய வழிகாட்டல்களை தயாரித்தல்.
- பிரதேச மட்டத் தேவைப்பாடுகளின் பொருட்டு மனித, பௌதீக மற்றும் நிதி வளங்களை வழங்குதல்.

**9.4 மாவட்டக் கண்காணிப்புக் குழு**

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் மாவட்ட மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற வலுவூட்டல் வேலைத்திட்டங்களின் வினைத்திறனையும் பயனுறுதியினையும் உயர்த்தும் பொருட்டு கண்கானிப்பு மற்றும் நெறிப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். மாவட்டச் செயளாளர்களால் குழு அங்கத்தவர் நியமிக்கப்படல் வேண்டும்.

**மாவட்ட கண்காணிப்புக் குழுவின் அமைப்பு**

- மாவட்டச் செயலாளர் (ஏற்பாட்டாளர்)
- கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்கள பிரதிநிதி ஒருவர்
- சகல சமுர்த்தி பிரதேச அமைப்புக்களை பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு பிரதிநிதி
- மாவட்டச் செயலாளரால் பெயரிடப்படுகின்ற பிரதிநிதி ஒருவர்

**மாவட்டச் கண்காணிப்புக் குழுவின் பணிப் பொறுப்புக்கள்**

- மாவட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களை கண்காணிப்பதும் பின்பணி ஆய்வும்
- முன்னேற்ற மீளாய்வு மற்றும் தர ஆய்வு அறிக்கையினை தயாரித்தல்
- மீள் யோசனை பட்டறையினை ஒழுங்கு செய்தல்.
- மாவட்டக் குழுவினை ஒருங்கிணைப்பச் செய்தல்
- உதவிச் சேவை நிறுவனங்கள் மற்றும் வேலைத்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்தல்.
- மாவட்ட வேலைத்திட்டங்களின் ஒழுங்குபடுத்தல்களுக்குறிய வழிகாட்டல்களை தயாரித்தல்.
- மாவட்ட மட்ட தேவைப்பாடுகளின் பொருட்டு மனித பௌதீக மற்றும் நிதி வளங்களை வழங்குதல்.

**9.5 தேசிய கண்காணிப்புக் குழு**

சமுர்த்தி வேலைத்திட்டங்களின் கீழ பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் வினைத்திறனையும் பயனுறுதியினையம் உயர்த்துதல் மற்றும் கண்காணிப்பு நடவக்கைகளின் பொருட்டு தேசிய மட்டத்தில் கண்காணிப்பு மற்றும் நெறிப்படுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுதல். மகளிர், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுப்பபடுத்துகை அமைச்சின் செயலாளரால் அங்கத்தவர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

**தேசிய கண்கானிப்புக் குழுவின் அமைப்பு**

- கௌரவ சமூக வலுப்படுத்துகை இராஜாங்க அமைச்சு (ஏற்பாட்டாளர்)
- செயலாளர், மகளிர், சிறுவர் விவிகாரம் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு
- பணிப்பாளர் நாயகம், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்
- பணிப்பாளர் தலைமையதிபதி, சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்,
- பணிப்பாளர் நாயகம், திட்டமிடல் திணைக்களம்
- பல்கலைக்கழகம் ஒன்றின் விடயத்தோடு இணைந்த விரிவுரையாளர் ஒருவர்
- மாவட்டக் குழுவினால் பெயர்குறிப்பிடப்பட்ட ஒரு தன்னார்வப் பிரதிநிதி ஒருவர் (25 பிரதிநிதிகள்)

**தேசிய கண்காணிப்புபக் குழுவின் பணிப்பொறுப்புகள்**

- வேலைத்திட்ம் தொடர்பில் தேசிய மட்டத்தில் கண்காணிப்ர்புச் செய்தல்.
- வேலைத்திட்டத்திகை மீளாய்வு செய்து, சிக்கல்கள், விசாரணைகள் மற்றும் முன்மொழிவுகளை சமர்ப்பித்தல்.
- மாவட்ட மற்றும் பிரதேச வேலைத்திட்டங்களின் ஒழுங்குகளுக்குறிய வழிகாட்டல்களைத் தயாரித்தல்
- மாவட்ட மற்றும் பிரதேச மட்ட தேவைப்பாடுகளின் பொருட்டு மனித, பௌதீக மற்றும் நிதி 'உதவிகளை வழங்குதல்.
- மாவட்ட ம்றறம் பிரதேச மட்டத்தில் வேலைலத்திட்டங்களின் செற்பாட்டுக் கருத்திட்டங்களின் முன்னேற்றமும் குறைபாடுகளையும் ஆராய்ந்து சிபாரிசினை வழங்குதல்.

மேலே குறிப்பிடப்பட்ட சகல கண்காணிப்புக் குழுக்களை உருவாக்கும் நடவடிக்கைகளை (கிராமிய, பிரதேச, மாவட்ட மட்டத்தில் தாபிப்பதும்) 2024.07.31ம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்படல் வேண்டும்.

**10. குடும்ப அபிவிருத்தித் திட்டமிடல் மற்றும் சுருக்கமாகத் தொகுக்கப்பட்ட திட்டங்களுக்குறிய படிவங்களின் அச்சுச் செலவு சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினால் மாவட்ட சமுர்த்திப் பிரிவின் ஊடாக பிரதேச செயலகங்களுக்கு வழங்க திட்டமிட்டுள்ளது.**

**11. வேலைத்திட்டத்தின் முன்னேற்றத்தினை அறிக்கையிடல்**

CRM கணினி வலையமைப்பின் ஊடாக பயனாளிக் குடும்பங்களை வலுவூட்டுவதற்குறிய தகவல்களை, அறிக்கைகள் மற்றும் பின்பணி ஆய்வுகளை மேற்கொள்ளும் பொருட்டு ஒரு திட்டம் அறிமுகப்படுத்தவுள்ளதுடன் வலையமைப்பில் தரவுகள் / தகவல்களை பதிவேற்றும் பொருட்டான முறையொன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது. கிராமிய, பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் தாபிக்கப்படும் நெறிப்படுத்தல், / கண்காணிப்புக் குழு மற்றும் வேலைத்திட்டத்துடன் நேரடியாக தொடர்புள்ள (படுகின்ற) உத்தியோகத்தர்களுக்கு சேகரிக்கின்ற தகவல்களைப் பயன்படுத்த வாய்ப்புக்கள் வழங்கப்படும்.

**12. வலுவூட்டலை அளவை செய்யும் அளவை முறை**

வலுவூட்டச் செய்யும் பொருட்டு தெரிவு செய்யும் அஸ்வெசும பயனாளிகளை இச்சுற்றறிக்கை ஆலோசனைகளின் பிரகாரம், நிலையான வாழ்வாதார வழியொன்றின் ஊடாக குடும்பத்தின் பொருளாதார நிலையினை முன்னேறுதல், மற்றும் உள, சமூக ரீதியாக வலுவூட்டும் நோக்கங்களை வெற்றிகொண்டதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான அளவுகோள்களின் ஊடாக எதிர்காலத்தில் அளவை செய்யப்படும்.

இதற்குறிய சுட்டிகள் மற்றும் அளவீட்டு முறைகள் எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தப்படும்.

**13. குடும்பங்களை வலவூட்டும் வேலைத்திட்டத்தின் செயற்பாட்டு கால வரையறை**

2024 ஆண்டின் வேலைத்திட்டத்தினை செய்படுத்தும் காலவரையறை

| தொடர் இலக்கம் | செயற்பாடுகள் | செயற்படுத்துக் கால வரையறை |
|---|---|---|
| 01 | பயனாளிகளை தெரிவு செய்தல் | 2024 ஜுன் 25 |
| 02 | வேலைத்திட்டம் தொடர்பில் உத்தியோகத்தர்களை விளக்கமளிப்பதும் பயிற்சியினை வழங்குவதும் | 2024 ஜுலை 31 |
| 03 | குடும்ப அபிவிருத்தித் திட்டமிடலைத் தயாரித்தல் | 2024 ஜுலை 31 ம் திகதிக்கு முன்னர் |
| 04 | கிராமிய. பிரதேச, மாவட்ட நெறிப்படுத்தல் குழுவினை தாபித்தல் | 2024 ஜுலை 31 ம் திகதிக்கு முன்னர் |
| 05 | குடும்ப அபிவிருத்தித் திட்டமிடலின் தகவல்களை கணினி வலையமைப்பில் பதிவேற்றுதல் | 2024 ஆகஸ்ட் 15ம் திகதிக்கு முன்னர் |
| 06 | கிராமிய, பிரதேச, மாவட்ட மட்டத்தில் கண்காணிப்புக் கழுவின் பொருட்டு அங்கத்தவர்களை இனங்காண்பதும் குழு அங்கத்தவர்களை நியமிப்பதும் | 2024 ஆகஸ்ட் 10 |
| 07 | பயனாளிகளின் தேவையான முன்னுரிமைப்படுத்துவதும் செயற்பாட்டுத் திட்டமிடலைத் தயாரிப்பதும் | 2024 ஆகஸ்ட் 15 |
| 08 | பயனாளிகளின் பொருட்டு இனங்காணப்பட்ட வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதனை ஆரம்பித்தல் | 2024 மார்ச் முதல் டிசெம்பர் வரையில் |
| | வேலைத்திட்டத்தினை பின்பணி ஆய்வு செய்தல், முன்னேற்ற மீளாய்வு மற்றும் அறிக்கையிடல் | 2024 மார்ச் முதல் டிசெம்பர் வரையில் |

2024ம் ஆண்டில் அரசாங்கத்தின் முக்கியமான அபிவிருத்தி வேலைத்திட்டம் ஒன்றாகவும் இலங்கையின் வறுமையினை ஒழிக்கும் முக்கிய அபிவிருத்தி மூலோபாயமான அஸ்வெசும சமூக நலன்புரி நன்மைகளைப் பெறும் பயனாளிகளை வலுவூட்டுவது முக்கியமானதாகும். இதனூடாக பயனாளிகளை நிவாரண உதவி பெறும் தங்கி வாழும் மனநிலையிலிருந்து மீட்டெழுத்தக் கொள்வது அவர்களை நிலைபேரானதாக வலுவூட்டும் பொருட்டாக செயற்படுத்தல் அந்த வேலைத்திட்டத்தினை வெற்றிகரமானதாக ஆக்கிக் கொள்ள தாங்கள் உட்பட பணியாளர் குழாம் வழங்கும் அர்ப்பணிப்பு மற்றும் பங்களிப்பினை தொடர்ந்தும் எதிர்ப்பார்ப்பதுடன் இந்த வேலைத்திட்டத்தின் நோக்கங்களை வெற்றிகொள்ள தங்களது ஒத்துழைப்பினை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**சீ.ஜீ. களுஆரச்சி**
**பணிப்பாளர் தலைமையதிபதி**

**பிரதிகள்**

1. ஜனாதிபதி செயலாளர், ஜனாதிபதி செயலாளர் அலுவலகம், கொழும்பு - த.கூக. பொருட்டு
2. செயலாளர், மகளிர், சிறுவர் மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு - த.கூக. பொருட்டு
3. பணிப்பாளர் நாயகம், தேசிய திட்டமிடல் திணைக்களம் - த.கூக. பொருட்டு
4. பணிப்பாளர் தலைமையதிபதி (அபிவிருத்தி 01) சமூக வலுவூட்டுகை அமைச்சு - த.கூக. பொருட்டு
5. பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்) சமூக வலுவூட்டுகை அமைச்சு - த.கூக. பொருட்டு
6. கணக்காளர் தலைமையதிபதி – தேசிய கணக்காய்வு ஆணைக்குழு - த.கூக. பொருட்டு
7. மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதிகள் - சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - த.கூக. பொருட்டு
8. பிரதேச கணக்காளர் - சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - த.கூக. பொருட்டு
9. பணிப்பாளர் உளவளத்தணைப் பிரிவு – மகளிர் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு - த.கூக. பொருட்டு
10. பணிப்பாளர் - கிராமிய அபிவிருத்தி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் - த.கூக. பொருட்டு
11. பணிப்பாளர் - தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் - த.கூக. பொருட்டு
12. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் - சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - உ.ந. பொருட்டு
13. சகல பிரிவுத் தலைவர்கள் - சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் - உ.ந. பொருட்டு

Translated By – M.M.M. Jawhar (Translator)